கலைஞர் 100
1924 - 2023

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

சர்வதேச சிறுதானிய ஆண்டு 2023

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி:21.09.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக உழவியல் துறையின் சேம்புக்கரை கிராமத்தில் ஒருங்கிணைந்த பண்ணையத்திட்டம்

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக உழவியல் துறையின் ஒருங்கிணைந்த பண்ணையத்திட்டம் சார்பாக பட்டியல் மற்றும் பழங்குடியின மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான பயிற்சி 21.09.2023 அன்று உழவியல் துறையில் நடைபெற்றது. இப்பயிற்சியில் ஆணைக்கட்டிக்கு உட்பட்ட சேம்புக்கரை கிராமத்தில் இருந்து 35 பேர் கலந்து கொண்டனர்.

ஒருங்கிணைந்த பண்ணைய முதன்மை உழவியல் விஞ்ஞானி முனைவர் பி.எம். சண்முகம் அவர்கள் வரவேற்று உரையாற்றினார். பயிற்சி துவக்க விழாவில் தலைமை யேற்று பேசிய பயிர் மேலாண்மை இயக்குனர் முனைவர் எம்.கே.கலாராணி அவர்கள் பயிற்சியைத் துவக்கி வைத்து, ஒருங்கிணைந்த பண்ணையத்தில் நாள், வார, மாத மற்றும் ஆண்டு வருமானத்தை வளப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்தும், பயிர் வளர்ச்சியில் நுண்ணூட்டச்சத்துக்களின் முக்கியத்துவம் குறித்தும் விரிவாக எடுத்துக் கூறினார். உழவியல் துறைத் தலைவர் முனைவர் பி.பரசுராமன் அவர்கள் ஒருங்கிணைந்த பண்ணையத்தின் முக்கியத்துவம் பற்றியும், பேராசிரியர் முனைவர் பி.எம்.சண்முகம் அவர்கள் காலநிலை மாற்றத்திற்கேற்ப ஒருங்கிணைந்த பண்ணையத்தில் நிலையான இலாபம் பெறுவதற்கான உத்திகள் பற்றியும் உரையாடினர். ஒருங்கிணைந்த பண்ணையத்தில் கால்நடைகளின் முக்கியத்துவம் பற்றி கால்நடை மருத்துவர் முனைவர் எம்.திருநாவுக்கரசு அவர்களும், விளைபொருள்களின் மதிப்புக்கூட்டுதல் பற்றி உணவியல் துறை பேராசிரியர் முனைவர் பி.கீதா, அவர்களும் செயல்முறை விளக்கம் அளித்தனர்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**